**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 201 of 2024

DATE : 14.10.2025

Depositions of witness for Prosecution

PW: 5

| | | | |
|---|---|---|---|
| Name | பாஸ்கரன் | Caste | |
| Father/Husband's Name | முத்தையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2025

**(எதிரி ஆஜர். வழக்கறிஞர் திரு குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது விருதுநகர் சார் பதிவாளர் அலுவலக எண் 1ல் சார் பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு வத்திராயிருப்பு சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணியில் இருந்த பொழுது கடந்த 21.08.2018 அன்று இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வத்திராயிருப்பு கிராமத்தைச் சார்ந்த சர்வே எண் 585க்கான வில்லங்கச் சான்றிதழ் மற்றும் ஆவண நகல் கேட்டு வேண்டுகோள் வைத்திருந்தார்கள். அதன் அடிப்படையில் மேற்படி சர்வே எண்ணிற்கான வில்லங்கச் சான்றிதழையும், ஆவண நகலையும் வத்திராயிருப்பு காவல் நிலைய சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் என்னுடைய அலுவலகத்தில் இருந்து நான்

வழங்கியதுதான். **அந்த ஆவணங்கள் அடங்கிய தொகுப்பு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

சர்வே எண் 585ல் ஏக்கர் 1.40 உள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே எண்ணில் கிணறு எதுவும் உள்ளதா என்றால் கிணறு உள்ளது. மேற்படி சர்வே எண்ணில் கிணறு இருக்கின்ற விஷயத்தை போலீசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை ஆனால் ஆவணங்களை சமர்ப்பித்து உள்ளேன். நான் போலீசார் விசாரணையில் சமர்ப்பித்த ஆவணங்களை முழுமையாக பரிசீலனை செய்து பார்த்திருந்தால் மேற்படி சர்வே எண்ணில் கிணறு அமைந்திருந்த விபரத்தை போலீசார் விசாரணையிலும், என்னுடைய முதல் விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வில்லங்கச் சான்றிதழையும் ஆவணத்தின் நகலையும் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : –** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு

**Judicial Form No.53**

**(See Rule 42)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 201 of 2024

DATE : 14.10.2025

Depositions of witness for Prosecution

PW: 6

| | | | |
|---|---|---|---|
| Name | முத்துலட்சுமி | Caste | |
| Father/Husband's Name | முருகன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2025

**(எதிரி ஆஜர். வழக்கறிஞர் திரு குமார் ஆஜர்)**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது ராஜபாளையம் தோட்டக்கலைத் துறையில் உதவி இயக்குனராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவல்லிபுத்தூரில் பணியாற்றிய பொழுது கூடுதல் பொறுப்பாக வத்திராயிருப்பில் பணியாற்றி வந்தேன். அப்பொழுது கடந்த 21.08.2018 அன்று சார்பு ஆய்வாளர் வழக்குச் சம்பந்தமாக ஆவணங்கள் கேட்டு கோரிக்கை வைத்திருந்தார். ராஜாராம் என்பவரின் தோட்டத்தில் ஏற்பட்ட சேதத்தினை பார்வையிட்டு சேதமதிப்பு சான்றிதழ் வழங்குமாறு கேட்டிருந்தார்கள். நானும், எனது அலுவலகத்தில்

பணிபுரியும் மற்றொரு ஊழியருமாக சம்பவ இடத்திற்கு சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு, சேதத்தினை மதிப்பீடு செய்து, 45 வாழைகள் சேதமடைந்தது என்றும் அதற்கான மதிப்பு ரூ. 7875/– எனச் சான்றிதழ் வழங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் சேதமதிப்பு சான்றிதழ் நான் வழங்கியதுதான். **சேத மதிப்பு சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை : –**

சேத மதிப்பு சான்றிதழ் கேட்டு யார் விண்ணப்பம் செய்திருந்தார்கள் என்றால் போலீசார் விண்ணப்பம் செய்து இருந்தார்கள். எனக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கை ஆவணத்தையும் இணைத்துதான் சேதமதிப்பு சான்றிதழை நான் வழங்கினேன் என்றால் சரிதான். போலீசார் எனக்கு கொடுத்த கோரிக்கை மனுவில் எத்தனை வாழை மரங்கள் சேதப்படுத்தியதாக சொல்லி உள்ளார்களா என்றால் இல்லை. சேதத்தை பார்வையிட்டு மதிப்பு சான்றிதழ் வழங்குமாறு மட்டும்தான் கேட்டிருந்தார்கள். கோரிக்கை மனு கொடுக்கும் பொழுது இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையை இணைத்து கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை.

நான் சமர்ப்பித்த சேதமதிப்பு சான்றிதழில் வாழை மரங்களின் தன்மை குறித்து ஏதேனும் குறிப்பிட்ட சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சேத மதிப்பு சான்றிதழ் வழங்கும் பொழுது மரத்தின் தன்மை குறித்து குறிப்பிடுவது வழக்கம் இல்லை. சேதத்திற்கான மதிப்பு மட்டும்தான் மதிப்பீடு செய்து வழங்குவது வழக்கம். ஒரு வாழைமரம் முழுமையாக முதிர்ச்சியடைய எடுத்துக் கொள்ளும் காலம் எவ்வளவு என்றால் 12 மாதம் காலங்களாகும். ஆனால் நான் வழங்கிய சேதமதிப்பு சான்றிதழில் சேதம் அடைந்ததாக சொல்லக் கூடிய வாழை மரங்கள்

சுமார் 10 மாதமான வாழை மரங்கள் என்று சொல்லி உள்ள நிலையில் அந்த வாழை மரங்கள் முதிர்ச்சி அடையாத நிலையில் உள்ள வாழை மரங்கள் என்று சொன்னால் சரியல்ல. முதிர்ச்சியடையாத நிலையில் உள்ள வாழை மரங்களை பார்வையிட்டு நான் வழங்கிய சேதுமதிப்புச் சான்றிதழ் செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

சம்பவ இடத்தை பார்வையிட்டதாக சொல்லி உள்ள நிலையில் நான் சம்பவ இடத்தை பார்வையிட்டியிருந்தால் சேதம் அடைந்ததாக சொல்லப்படும் வாழை மரங்கள் முழுவதுமாக முறிந்து காணப்பட்டதா அல்லது வளைந்து காணப்பட்டதா என்று நான் குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்று சொன்னால் பொதுவாக சேதத்திற்கான மதிப்பு வழங்குவது மட்டும் தான் வழக்கம். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமலே சேதமதிப்பு சான்றிதழ் வழங்கியதால் தான் வாழை மரத்தின் சேதம் குறித்து குறிப்பிட்டு எதுவும் சொல்லாமல், சேதத்திற்கான மதிப்பை மட்டும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதன் அடிப்படையில் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடம் இந்த வழக்கின் புகார்தாரருக்கு சொந்தமான இடம் என்று எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் AHO யை விசாரித்து தெரிந்து கொண்டேன்.

AHO தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் நான் கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான் ஆனால் சம்பவ இடத்திற்கு பார்வையிட நானும் அவரும் சென்றிருந்தோம். நானும், AHO ம் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், AHO தயார் செய்து வைத்திருந்த ஆவணத்தில் நான் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக நான்

சான்றிதழ் வழங்கி அதன் அடிப்படையில் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு